රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/SLAS/ Vacancies - Reply (Vol – II) | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2024.02.28 |

இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான அறிவித்தல்

**நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு**

**நீர்வளச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிதி) பதவியில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்**

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் நீர் வளச் சபையில் வெற்றிடம் நிலவும் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிதி) பதவிக்கு இரண்டாம் நிலை அடிப்படையில் இணைய விருப்பம் தெரிவிக்கும் இலங்கை நிர்வாக சேவையின் நிர்வாகத் துறையில் 05 வருட சேவை அனுபவம் கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. தாபன விதிக்கோவையின் அத்தியாயம் V இன் பிரிவு 2.6 இன் பிரகாரம் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதோடு அதன்படி பதவிக்கு உரித்தான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாகிய போக்குவரத்துக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் தொடர்பாடல் கொடுப்பனவு என்பவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக நீர்வளச் சபைத் தலைவரின் இலக்கம் E/250 மற்றும் 2024.02.02 ஆம் திகதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

03. அதன்படி, விண்ணப்பதாரர்கள் தங்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் இதர தகவல்கள் உள்ளடங்கிய, தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவையொன்றினை, அது தொடர்பிலான எழுத்துப்பூர்வ கோரிக்கையுடன், உரிய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை 2024.03.15 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னதாக தமது நிறுவனத் தலைவர் மூலம் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதன் மென் பிரதியொன்றை pubad.dslas@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

04. மேலும், விண்ணப்பத்தை அனுப்பும் போது, விண்ணப்பதாரர்கள் இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பெற்றிருப்பின் தற்போது சேவையாற்றும் சேவை நிலையத்தில் பின்னுரிமையாளர் ஒருவருடன் கூடிய/ இன்றிய/ பின்னர் பெற்றுத் தரும் அடிப்படையில் விடுவிக்கலாம் என அவ்அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவர் சான்றுப்படுத்தி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.


ஒப்பம்./பி.டபிள்யூ. ராஜபக்ச
மேலதிக செயலாளர் (பொது நிர்வாகம்)
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக
தொலைபேசி : 0112-698605
தொலைநகல் : 0112 – 683651
மின்னஞ்சல் முகவரி: pubad.dslas@gmail.com